# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/69 - 2018 ඔක්තෝබර් මස 13 වැනි සෙනසුරාදා - 2018.10.13

*2092/69 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியினை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

காலி மாவட்டத்தின் கோனாபீனுவல பிரதேச செயலகப் பிரிவின், கோனாபீனுவல கிராமத்தில் அமையப்பெற்றுள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட அட்டவணை வரைபட இல. 4336 ஐக் கொண்ட அட்டவணை நிலத் துண்டின் வலய இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 0.0010 ஹெக்டயார் (ஏக்கர் 0 : றூட் 0 : பேர்ச்சஸ் 0.3955) கொண்ட படதொபகஹவத்த என்ற காணியின் விபரம் பின்வருமாறு:

வடக்கு : பாதை (பெ. தெ. அபி. அதி. சபை) மற்றும் கா. 3857 கொண்ட அட்டவணை நிலத் துண்டின் 57 ஆம் இலக்கக் காணித் துண்டு; கிழக்கு : கா. 3857 கொண்ட அட்டவணை நிலத் துண்டின் 57 இலக்கக் காணித் துண்டு மற்றும் பீ. டீ. ஆர். தேவசிறி மற்றும் ஜே. ஏ. விஜேவிக்கிரம உரிமை கோரும் படதொபகஹவத்த; தெற்கு: ஜே. ஏ. விஜேவிக்கிரம உரிமை கோரும் படதொபகஹவத்த, விமல் திலக பின்னதூவ உரிமை கோரும் படதொபகஹவத்த மற்றும் கா. 3857 கொண்ட அட்டவணை நிலத் துண்டின் இலக்கம் 58 ; மேற்கு: கா. 3857 கொண்ட அட்டவணை நிலத் துண்டின் 58 ஆம் இலக்கக் காணித் துண்டு மற்றும் பாதை (பெ. தெ. அபி. அதி. சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கோனாபீனுவல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். என். பியுமலி லியனகே,<br>
பிரதேச செயலாளர்,<br>
கோனாபீனுவல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,<br>
கோனாபீனுவல,<br>
2018, செத்தெம்பர் 28.

10 - 1504

திருத்துப் பத்திரம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: MUL/LND/02/ACQ/42.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/ 15/ 2014/ VE/48.

மேற் குறித்த தலைப்பின் கீழ் இல. 2078/9 மற்றும் 2018, யூலை மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் மூன்றாம் பகுதியில் 7 ஆம் பிரிவின் கீழ் முலட்டியன பிரதேச செயலாளரினால் அறிவித்தல் விடுக்கப்பட்ட விளம்பரத்தில் 2018, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என்பதை 2018, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு எனவும், 2018, செத்தெம்பர் மாதம் 10 என்பதை 2018, திசெம்பர் மாதம் 05 எனத் திருத்தப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்கள் 2018.07.02 ஆந் திகதிய 2078/9 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

சுசன்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன,
2018, ஒற்றோபர் 10.

10 - 1505